பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 08 2024 **THURSDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள குஜராத் மாநிலத்திற்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதி அளித்துள்ளார்.

2. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

3. சர்வதேச அளவிலான குற்றங்களை உறுதியுடன் ஒடுக்குவது என ஆசியான் அமைப்பு நாடுகள் முடிவு செய்துள்ளன.

4. இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையே கடற்படை ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இருநாடுகளும் முடிவு செய்துள்ளன..

5. இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சமீர் வர்மா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள குஜராத் மாநிலத்திற்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் சௌராஷ்ட்ரா மற்றும் Kautch பகுதிகளில் பெய்து வரும் தொடர்மழை நிலவரம் மற்றும் அங்கு நடைபெற்று வரும் மீட்பு நடவடிக்கைகள் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேலுடன் பிரதமர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக பிரதமரிடம், முதலமைச்சர் எடுத்துக் கூறினார்.

நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்திய திரு. நரேந்திர மோடி, பொதுசுகாதார பணிகள் மற்றும் மழைநீரை வெளியேற்றும் பணிகளை துரிதப்படுத்துமாறு கூறினார்.

அங்கு விரைவில் இயல்பு நிலை திரும்புவதற்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்றும் குஜராத் முதலமைச்சரிடம் பிரதமர் உறுதியளித்தார்.

இதனிடையே, வெள்ள பாதிப்புக்குள்ளான பகுதிகளில் 35க்கு மேற்பட்ட சுகாதார குழுவினர் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு, மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்கி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

இளையோரிடையே விளையாட்டு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்ற அனைவரையும் பாராட்டுவதற்கான தருணம் இது என்று கூறியுள்ளார்.

மறைந்த ஹாக்கி வீரர் மேஜர் தியான்சந்த் பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுவதாகவும் திரு. நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை மகாராஷ்ட்ர மாநிலம் செல்கிறார்.

மும்பையில் காலை 11 மணியளவில் நடைபெறவுள்ள உலகளாவிய Fintech விழாவில் அவர் பங்கேற்று பேசுகிறார்.

பிற்பகல் ஒன்றரை மணியளவில் Palghar ல் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடங்கி வைப்பதுடன், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

>>>>>><<<<<<

ஹரியானா மாநில பிஜேபி நிர்வாகிகள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

பிஜேபி தலைவர் திரு ஜே பி நட்டா இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் திரு அமித்ஷா, திரு தர்மேந்திர பிரதான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தல் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். இதற்கிடையே பிஜேபி மத்திய தேர்தல் குழு கூட்டம் இன்னும் சற்றுநேரத்தில் நடைபெற உள்ளது.

இதில் பிரதமர் திரு நரேந்திரமோடி பங்கேற்கிறார்.

>>>>>><<<<<<

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது. வேட்புமனுக்களை தாக்கல் செய்ய அடுத்த மாதம் ஐந்தாம் தேதி கடைசி நாளாகும். வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஆறாம் தேதி நடைபெறுகிறது. மனுக்களை விலக்கிக் கொள்ள ஒன்பதாம் தேதி கடைசி நாளாகும். இரண்டாவது கட்ட தேர்தல் அடுத்த மாதம் 25-ஆம் தேதி 26 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதனிடையே, முதல்கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 24 தொகுதிகளுக்கான வேட்புமனுக்களை விலக்கிக் கொள்ள நாளை கடைசி நாளாகும்.

முதல்கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 18-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

மூன்றாவது மற்றும் இறுதிகட்ட வாக்குப்பதிவு அக்டோபர் மாதம் 1ஆம் தேதி நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை அக்டோபர் 4ஆம் தேதி நடைபெறும்.

>>>>>><<<<<<

சர்வதேச அளவிலான குற்றங்களை உறுதியுடன் ஒடுக்குவது என ஆசியான் அமைப்பு நாடுகள் முடிவு செய்துள்ளன

ஆசியான் நாடுகளின் அமைச்சர்கள் நிலையிலான 18வது கூட்டம், லாவோஸ் தலைநகர் Vientiane-ல் நடைபெற்றது.

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப நிகழ்த்தப்பட்டு வரும் குற்றங்களின் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு, அவற்றை முறியடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

பரஸ்பரம் உறுப்பு நாடுகளுக்கு இடையே குற்றங்கள் தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்வது என்றும், குற்றங்களை ஒருங்கிணைந்து முறியடிப்பது என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியா - இஸ்ரேல் இடையேயான ஒத்துழைப்பை தொடர்ந்து மேம்படுத்துவதற்கு இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன. புதுதில்லி வந்துள்ள இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் திரு. Yaakov Blitshtein—ஐ திரு. ஜெய்சங்கர் வரவேற்று பேசினார். இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், இருநாடுகளும் ஒத்துழைப்பை தொடர்ந்து மேம்படுத்துவதென முடிவு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போதைய நிலைமை குறித்து இஸ்ரேல் அமைச்சருடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாகவும் திரு ஜெய்சங்கர் அதில் பதிவிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

இந்தியா தென்னாப்பிரிக்கா இடையே கடற்படை ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

இரு நாடுகளின் கடற்படை அதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தை இந்திய கடற்படை ரியர் அட்மிரல் நிர்பை பாப்னா, தென்னாப்பிரிக்க கடற்படையின் தலைமை இயக்குநர் Rear Admiral David Maningi Mkhonto, ஆகியோர் தலைமையில் புதுதில்லியில் இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடற்படை செயல்பாட்டு நல்லுறவுகளை வலுப்படுத்த பரஸ்பரம் உறுதியேற்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடற்படையின் ஆயத்த நிலையை மேம்படுத்துவது, பயிற்சி வழங்குவதில் அதிக முன்னுரிமை அளிப்பது, இருதரப்புக்கும் இடையே பாதுகாப்பு தகவல்களை பரிமாறிக் கொள்வது என பேச்சுவார்த்தையின்போது முடிவு செய்யப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் அன்னையின் பெயரில் ஒரு மரம் வளர்ப்போம் இயக்கத்தின் கீழ், நாடுமுழுவதும் 140 கோடி மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அடுத்த மாதத்திற்குள் 80 கோடி மரக்கன்றுகளை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, புதுதில்லியில் இந்த இயக்கத்தின் கீழ் நடைபெற்ற மரம் நடும் விழாவில் பங்கேற்றுப் பேசிய மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான், ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் மகளிர் வனம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

புத்தொழில் நிறுவனங்களை தொடங்குவதில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கூறியுள்ளார். இன்று புதுதில்லியில் டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார். நாடுமுழுவதும் கடந்த பத்தாண்டுகளில் 40 நிமிடத்திற்கு ஒரு புத்தொழில் நிறுவனம் தொடங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். மகளிரின் தலைமையின் கீழ், ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் செயல்பாட்டில் உள்ளதாகவும் அமைச்சர் கூறினார். தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் அவர் தெரிவிததார். செயற்கை நுண்ணறிவு இயக்கத்திற்கு மத்திய பட்ஜெட்டில், 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதையும் திரு. ஜிதின் பிரசாதா சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் ஊடுருவல் தடுப்பு நடவடிக்கையின் போது நேரிட்ட இருவேறு துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

Machil பகுதியில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில், இரண்டு தீவிரவாதிகளும் Tangdhar பகுதியில் நிகழ்ந்த மற்றொரு துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் ஒரு தீவிரவாதியும் கொல்லப்பட்டதாக ஜம்மு காஷ்மீர் காவல்துறை தலைமை இயக்குநர் திரு. R.R. Swain தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இந்தியாவுக்கு குழாய் மூலம் எரிவாயு ஏற்றுமதி செய்யப்படுவதாக சமூகவலைதளங்களில் வெளியான தகவல்களை பங்களாதேஷ் அரசு மறுத்துள்ளது.

அந்நாட்டு எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த 25ஆம் தேதி முதல் இந்தியாவுக்கு எரிவாயு வழங்குவதாக தகவல் பரவி வருவதை சுட்டிக்காட்டியுள்ளது.

முந்தைய அவாமி லீக் அரசு, இந்தியாவுக்கு எரிவாயு வழங்கியதாகவும், தற்போதைய இடைக்கால அரசு அதனை நிறுத்தியுள்ளதாகவும் அந்த தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதுதொடர்பான காணொலியும் வெளியிடப்பட்டது. இந்தியாவுக்கு குழாய்கள் மூலம் ஒருபோதும் இயற்கை எரிவாயு வழங்கப்படவில்லை என்று பங்களாதேஷ் அமைச்சகம் மறுத்துள்ளது. அதுபோன்ற தகவலில் உண்மை இல்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நேபாளத்தில் பெய்த தொடர்மழை காரணமாக, அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாகனப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்குப்பகுதியில் அடங்கிய Budhabagar அருகே Sanfebagar – Martadi சாலையில் முழுவதுமாக போக்குவரத்து தடைபட்டதாகவும், பேருந்துகள் நடுவழியில் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கினறன. மழை வெள்ளம் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துகள் மற்றும் பாலங்கள், அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட ஏராளமான கட்டிடங்கள் வெள்ள நீரில் மூழ்கியதாகவும் அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சமீர் வர்மா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 22-20 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் **Shesar Hiren Rhustavito** –வை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் சங்கர் முத்துசாமி சுப்பிரமணியனும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டடத்தில் ரக்ஷிதா ஸ்ரீ 21-15, 21-11 என்ற செட்கணக்கில் இந்தியாவின் தன்வி சர்மாவை வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ் கபிலா – தனிஷா கிறாஸ்டோ இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவில் பிரியா – சுருதி மிஷ்ரா இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<<**

ஆசிய சப்ஜூனியர் குத்துச்சண்டைப் போட்டி இன்று அபுதாபியில் தொடங்கியது.

**>>>>>>END<<<<<<**